C

# அறிவித்தல்

அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், இன்றைய தினம் பி.ப. 5.00 மணிக்கு வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தின் இறுதியில் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2017 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பினை நிறைவேற்றிக் கொள்வதற்கான வாக்கெடுப்பின் பின்னர், பாராளுமன்ற சபாபீடத்தில் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ள இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையைப் பயன்படுத்தி ஒத்திகை நடைமுறையொன்றாக வாக்களிப்பதற்கு சிறிது நேரம் சபாபீடத்தினுள் வீற்றிருந்து உங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு தயவாக அறியத் தருகின்றேன்.

மேலும், உங்களனைவரினதும் மேசையில் பொருத்தப்பட்டுள்ள இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையைப் பயன்படுத்தி வாக்களிப்பினை மேற்கொள்ளும் முறைமை தொடர்பாக மிகவும் தெளிவான அறிவுறுத்தல்களுடன் கூடிய வர்ண அச்சுடன் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு, உங்களனைவரினதும் மேசையில் வைக்கப்பட்டுள்ள கைநூலினை நன்றாக வாசித்து இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையைப் பயன்படுத்தி வாக்களிப்பினை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கும்படி தயவாக வேண்டிக் கொள்கின்றேன்.